**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மேட்டுப்பாளையம் முதல்வர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை: முனைவர்.சுவர்ணலதா ஜோசப் எம்.ஏ.,எம்பில்.,பிஎச்டி**

**ந.க.எண். 358/அ/2020. நாள். 16.03.2020**

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை- தமிழ்நாடு அமைச்சுப் பணி –நேரடி நியமனம்- தட்டச்சர் -தொகுதி IV -2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயலர் கடிதம் எண்.1707 /PSD-A/2019 நாள்: 20.02.2019.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் செயலர் கடிதம் எண்.1707 /PSD-A3/2019 நாள்: 30.03.2019.
3. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்: 7882/பி1/2019 நாள்: 28.02.2019 மற்றும் 24.04.2019.
4. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்: 4920/பி1/2019 நாள்: 31.05.2019.
5. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்: 7882/பி1/2019 நாள்: 10.03.2020.

*************

ஆணை.

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை கடிதத்தில் நேரடி நியமனம் மூலம் தொகுதி IV-க்கான போட்டித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு கல்லூரிக் கல்வித் துறைக்கு தட்டச்சராக ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களில் பார்வை 3-ல் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி வரிசை எண். 6 தட்டச்சராக தெரிவு செய்யப்பட்ட திருமதி.ப.புஷ்பா என்பார் 12.03.2019 (முற்பகல்) கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்த அன்னார் பணிவிருப்ப இடப்பெயர்வு மூலம் பார்வை 4-ல் கண்டவாறு 06.06.2019 (பிற்பகல்) இக்கல்லூரியில் தட்டச்சராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 1-ல் கண்டுள்ள அரசு ஆணைகளில் பணியில் சேர்ந்த பணியாளர்களை பணிவரன்முறை செய்வது குறித்து பார்வை 5-ல் கண்ட கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி நியமன அதிகாரியே பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. மேற்கண்ட ஆணைகளின்படி கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் 12.03.2019 (முற்பகல்) பணியில் சேர்ந்த திருமதி.ப.புஷ்பா விருப்ப இடப்பெயர்வு மூலம் பணியில் சேர்ந்த தான் பணியேற்ற நாள் முதல் பணி வரன்முறை செய்ய கல்லூரி முதல்வரே பணிநியமன அதிகாரி என்பதால் அன்னாரை பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. மேலும் அன்னார் தனது பணியில் மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகள் மன நிறைவு அளிக்கும் வகையில் பணியாற்றும் நிலையிலேயே பணிக்காலத்தில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தமைக்கு ஆணைகள் வழங்கப்படும் என அறிவிக்கலாகிறது.

Scanned with CamScanner

மேலும் "இப்பணி வரன்முறை தொகுதி IV - 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டு பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது". எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதல்வர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்)
மேட்டுப்பாளையம்,
16/3/2020

பெறுநர் :

திருமதி.ப.புஷ்பா
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மேட்டுப்பாளையம்.

நகல் :

1. கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6. (தகவலின் பொருட்டு பணிந்தனுப்பலாகிறது).
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கோவை -18. (தகவலின் பொருட்டு பணிந்தனுப்பலாகிறது).
3. பணிப்பதிவேட்டிற்கு

Scanned with CamScanner